[1972 ஏப்ரல் 3

கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள தரிசு நிலங்கள்

* 855 வினு—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென்னூர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், பல ஆண்டுகளாக ஏல தரிசாக உள்ள நிலங்களை உடனடியாகத் தரிசாக மாற்றி அனுபோகதாரர்களுக்கு அடைமானம் செய்துவைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, 12 ஆண்டுகளாகத் தீர்வை செலுத்தி, சலான் கட்டி 1958-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் அந்த விவசாயிகளுக்கு நிலம் அடைமானம் செய்யவில்லை. பல தடவைகள் அந்த விவசாயிகள் கோட்டாட்சித் தலைவரிடத்திலே சென்றும் கட்டுக்கோப்புகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இவைகளைப் போக்க ஒரு தீர்வை செலுத்தியவர்களுக்குக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அடைமானம் செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வட்டத்தில் 1.767 எக்கர் 46 சென்ட் நிலம் ஏலத்தரிசாக இருக்கிறது. 87 ஏக்கர் 39 சென்ட் சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கு அடைமானம் செய்யப்பட்டது. மீதம் நிலத்தை ஏலம் விட்டு காயம் செய்திருக்கிறூர்கள். அல்லது வேறு யாராவது ஆக்கிரமிப்புச் செய்து அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 12 ஆண்டுகள் தீர்வைகட்டி வைத்திருந்தால் அவைகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிக்கிறேன்.

அசோக் நகரிலிருந்து இணைப்புச்சாலை.

* 856. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—